குறைந்துவிட்டது என்ற குற்றச்சாட்டு இருக்கிறது, அது உண்மையா? அப்படியானால் தமிழக அரசு நேரடியாக பஞ்சாப், அரியானா போன்ற உபரி மாநிலங்களில் கோதுமையை கொள் முதல் செய்ய தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோன்று அந்தச் செய்திகளைச் செய்தித் தாள்களின் மூலமாக நாமும் அறிந்தோம். ஆனால், அதிகாரபூர்வமாக அரசுக்கு அப்படிப்பட்ட தகவல்கள் வரவில்லை. ஹரியானா, பஞ்சாப் போன்ற மாநிலங்களுக்குச் சென்று தனியாக நாம் கோதுமையை வாங்கினால் விலை அதிகமாக இருக்கும். லெவி விலைக்கு கிடைக்காது. ஆகவே வெளிச் சந்தை விலைக்கு வாங்கிக் கொண்டு வந்து இங்கே அரைத்து விற்றால் ரவா கோதுமை போன்றவற்றின் விலை அதனால் மிக அதிகமாகிவிடும். மேலும் ட்ரான்ஸ்போர்ட் செலவுகளை எல்லாம் சேர்த்தால் விலை பல மடங்கு உயர்ந்து விடும். அதனால்தான் வெளிச்சந்தையிலே வாங்காமல் லெவி விலையிலேயே கூடுதலாக ஒதுக்கித் தரவேண்டும் என்று வற்புறுத் துகிறோம்.

மங்கலம் மாமண்டூர் கிராமத்தில் வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்கள்.

* வினா எண், 164—திரு. செ. குப்புசாமி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:—

(அ) வடாற்காடு மாவட்டம், வந்தவாசி வட்டம் மங்கலம் மாமண்டூர் 116பி. சர்வேக்கு அரசு சார்பில் கொடுக் கப்பட்ட பட்டா ரத்து செய்யப்பட மாவட்ட ஆட்சித் தலைவர் உத்தரவு பிறப்பித்துள்ளாரா?

(ஆ) ஆம் எனில் அது நடைமுறைக்கு வரவில்லை என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்; (அ) மற்றும் (ஆ): வீட்டுமனை கொடுக்கப்பட்ட 22 நபர்களில் பலர் முறை தவறாக அதைப் பயன்படுத்தியதால் அதை ரத்து செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்றது.

இராணிப்பேட்டையில் பாரத் கனரக மின் நிறுவனம் மூலம் புதிய தொழிற்சாலை ஆரம்பிக்கும் திட்டம்

* வினா எண். 165—திரு. த. வீராசாமி, மற்றும் திரு. வி. வி. சுவர்மிநாதன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் இராணிப்பேட்டையில் பாரத் கனரக மின் நிறுவனம் புதிய தொழிற்சாலை தொடங்கு வதற்கு அரசிடம் இலவசமாக நிலம் அளிக்கும்படி கேட்டுள்ளதா?